# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 2032/12 - 2017 අගෝස්තු 16 වැනි බදාදා - 2017.08.16

***2032/12 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை***

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் ஆட்சியுரிமை எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன். குறித்த வழியுரிமை எடுத்துக் கொள்ளப்படுவது எந்தக் காணியில் இருந்து என்பது பற்றி நிரல் II இல் விபரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை I**

மொனராகலை - புத்தல கூட்டிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் குபுக்கன நீர் உள்வாங்கு காணிக்கு உட்செல்லும் பாதையை நிர்மாணிப்பதன் பொருட்டு காணிப்பகுதிகளின் வழியுரிமையை எடுத்துக்கொள்ளல்.

**அட்டவணை II**

ஊவா மாகாணத்தில், மொனராகலை மாவட்டத்தில், புத்தல பிரதேச செயலாளர் பிரிவில், புத்தல வெதிரட கோரளையின் சிறு பிரிவில், ஒக்கம்பிடிய கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. எம்ஒ/பிரீரீ/2015/725 மற்றும் 2016.06.24 ஆந் திகதியிடப்பட்ட ஆரம்ப வரைபடத்தில் துண்டுகள் ஏ, பி மற்றும் சீ எனக் குறிப்பிடப்பட்டுள்ள 0.1220 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய மூன்று காணித் துண்டுகளின் எல்லைகள் :

*01.* **துண்டு 'ஏ' - எலமானய - விஸ்தீரணம் : 0.0619 ஹெக்டயார்**
வடக்கு : ஈ. ஏ. அனுலாவதி உரிமை கோரும் எலமானய ; கிழக்கு : ஈ. ஏ. அனுலாவதி உரிமை கோரும் எலமானய மற்றும் நீரோடை ; தெற்கு : நீரோடை, ஈ. ஏ. அனுலாவதி உரிமை கோரும் எலமானய மற்றும் குபுக்கன் ஓயா ; மேற்கு: ஈ. ஏ. அனுலாவதி உரிமை கோரும் எலமானய மற்றும் குபுக்கன் ஓயா.

*02.* **துண்டு 'பி' - எலமானய - விஸ்தீரணம் : 0.0495 ஹெக்டயார்**
வடக்கு : நீரோடை, ஈ. ஏ. அனுலாவதி உரிமை கோரும் எலமானய ; கிழக்கு : ஈ. ஏ. அனுலாவதி உரிமை கோரும் எலமானய மற்றும் வீதி ; தெற்கு : வீதி மற்றும் ஈ. ஏ. அனுலாவதி உரிமை கோரும் எலமானய ; மேற்கு: ஈ. ஏ. அனுலாவதி உரிமை கோரும் எலமானய மற்றும் நீரோடை.

*03.* **துண்டு 'சீ' - எலமானய - விஸ்தீரணம் : 0.0106 ஹெக்டயார்**
வடக்கு : நீரோடை, உரிமையாளரைக் கண்டுபிடிக்க முடியாத எலமானய ; கிழக்கு : உரிமையாளரைக் கண்டுபிடிக்க முடியாத எலமானய மற்றும் வீதி (வீ.அ.அ.) ; தெற்கு : வீதி (வீ.அ.அ.) மற்றும் உரிமையாளரைக் கண்டுபிடிக்க முடியாத எலமானய ; மேற்கு: உரிமையாளரைக் கண்டுபிடிக்க முடியாத எலமானய மற்றும் நீரோடை.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற
மறுசீரமைப்பு அமைச்சர்.

எனது இல. : 4/3/9/2015/டபிள்யூஎஸ்/98.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
*2017, யூன் 21.*

*8 - 1042*


1A – G26060 – 12 (2017/08)    *இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.*

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*